நாள்.29.09..2023

**அசல் வழக்கு எண். 156/2022**

<u>வா.சா.1 - பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

நான் தாவா சொத்தை கண்ணதாசனின் மாமியார் கஸ்தூரி சாகுபடி செய்துவந்ததை காண்பிப்பதற்கு ஏதேனும் ஆவணங்கள் உண்டா என்றால் இல்லை. கண்ணதாசனின் மாமியார் கஸ்தூரியிடமிருந்து பவர்ஏஜெண்ட் எனது மனைவி லதா அனபவம் எடுத்துக்கொண்டாரா என்றால் பவர் பத்திரத்திற்கும், எனது கிரைய பத்திரத்திற்கும் 5 நாட்கள் மட்டுமே இருந்தது. எனது மனைவி டிராக்டர் மூலம் உழவு செய்தார் நானும் உடன் இருந்ததேன் . வழக்கு சொத்தை எனது மனைவியிடமிருந்து ரூ.1,30,700/- கிரைய தொகை கொடுத்து கிரையம் வாங்கினேன் .. கிரைய தொகையை எனது மனைவி கண்ணதாசனின் மாமியாரிடம் கொடுத்துவிட்டார் . வெளிநாட்டை சேர்ந்தவர்கள் இந்தியாவில் உள்ள சொத்தை விற்கவேண்டும் என்றால் இந்திய ரிசர்வ் வங்கியின் அனுமதி பெற்றுதான் விற்க முடியும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது மனைவிக்கு பவர் கொடுத்தவர்கள் இந்த ரிசர்வ் வங்கியிடம் அனுமதி பெற்றுள்ளார்கள் என்ற விபரத்தை எனது மனைவியிடம் கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு பக்கத்தில் எனக்கு வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் உள்ளது. வழக்கு சொத்திற்கு சுப்பையன் பெயரிலிருந்து நேரடியாக எனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்துகொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தில்

நான் எள்ளு சாகுபடி செய்ததற்கு எந்த ஆவண ஆதாரமும் இல்லை என்றால் சரிதான். சுப்பையன் மற்றும் வடிவேல் ஆகியோரின் ராமன் அம்பலம் என்றால் சரிதான். சுப்பையனும், வடிவேலும் ஒன்றாக குடும்பம் நடத்தி வந்தபோது அவர்களுக்கு சொந்தமான சொத்துக்களை அடமானம் வைத்து அதன் மூலம் வந்த பணத்தில் சுப்பையன் 1952 ம் வாக்கில் வெளிநாடு சென்றார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. சுப்பையன் வெளிநாடு சென்றபிறகு வடவேல் மற்றும் அவரது தகபனாருடன் எந்த தொடர்பும் இல்லாமல் சிங்கப்பூரிலேயே இருந்து வந்தார் என்றால் அது பொய். சுப்பையன் வெளிநாடு சென்வதற்காக அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்களை வடிவேல்தான் பணத்தை கொடுத்துதான் அடமானத்தை மீட்டு எடுத்தார் என்றால் அது பொய். சுப்பையன் வெளிநாடு சென்றபிறகு 20 ஆண்டுகள் கழித்து 1972 ம் ஆண்டு வாக்கில் தாவா கிராமத்திற்கு வந்தார் என்றால் கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆனால் அது பொய். சுப்பையன் இந்தியாவிற்கு திரும்ப வந்தபிறகு வடிவேலிடம் குடும்ப சொத்துக்களை பாகம்பிரித்து கொடுக்கும்படி கேட்டார் என்றும், அதன் படி பாகம்பிரித்து பத்திரம் பதிவு செய்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். பாகம்பிரித்து பத்திரம் பதிவு செய்துக்கொண்டா பிறகு சுப்பையன் ஏற்கனவே அடமான தொகையை செலுத்து வடிவேல் சொத்துக்களை மீட்டுள்ளதாலும், சுப்பையனின் பாக சொத்திற்கு உரிய தொகையை வடிவேல் கொடுத்துவிடதாலும், சுப்பையனின் பாக சொத்துக்களை வாடிவேலிடம் வாய்மொழியாக கிரையமாக கொடுத்துவிட்டு சிங்கப்பூர் சென்று நிரந்தரமாக தங்கிவிட்டார் என்றால் அது பொய். மேலே சொல்லியப்படி சுப்பையன்

வெளிநாடு சென்ற பிறகு ராமன் அம்பலத்திற்கு சொந்தமான வழக்கு சொத்து உட்பட அனைத்து சொத்துக்களையும் வடிவேல் மற்றும் அவரது மகன்களான 1,2 எதிர்வாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை கண்ணதாசனின் மாமியாரோ, பவர் ஏஜெண்டாடனா எனது மனையோ, நானோ எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்று சொன்னாலும், நாளதுதேதி வரை 1,2 எதிர்வாதிகள் வசம் இருந்து வருகிறது என்று சொன்னால் அது பொய். நான் முதன் முதலில் சிங்கப்பூர் நாட்டிற்கு எப்போது சென்றேன் என்றால் 2006-2007 ல் சென்றேன். 2017 ல் திரும்ப வந்துவிட்டேன். 2017-க்கு பிறகு 2022-9 ம் மாதம் சிங்கப்பூர் நாட்டிற்கு சென்றேன். எனது மனைவிக்கு பவர் கொடுத்த நபர்களை நான் சிங்கப்பூரில் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு பக்கத்தில் எனக்கு சொத்துக்கள் இருப்பதால் , 1,2 எதிர்வாதிகளுக்கு பூர்வீக சொத்துக்களை அபகரிக்கவேண்டும் என்பதற்காக சட்டத்திற்கு புறம்பான , செல்லாத ஆவணங்களை உற்பத்தி செய்துக்கொண்டு அதன் அடிப்படையில் வருவாய் ஆவணங்களில் மாற்றம் செய்துக்கொண்டு அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மனைவிக்கு பவர் கொடுத்த பத்திரமும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அதன் அடிப்படையில் நான் கிரையம் வாங்கிய பத்திரமும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், அது நடைமுறைக்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து எந்த காலத்திலும் எனது அனுபவத்தில் இல்லை என்றும், வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் வழக்கு சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்றும், ஆகையால்

எனக்கு எந்த பரிகாரங்களும் கிடைக்ககூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எதிர்வாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யகூடியது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,
District Munsif, Pattukkottai.